பக்கங்கள் 16+ 03

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | சித்திரை 04 வியாழக்கிழமை 17.04.2025 | அதிர்வு 257

## தபால் மூல வாக்களிப்பு ஏப்ரல் 24,25,28,29இல்

### புதிய அறிவிப்பு வெளியானது

இலங்கைத் தேர்தல் ஆணையம் வரவிருக்கும் 2025 உள்ளாட்சித் தேர்தல்களில் அஞ்சல் வாக்களிப்புக்கான திருத்தப்பட்ட திகதிகளை 03

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# மன்னாரில் காற்றாலைகள் மக்கள் கருத்தறிந்துதான்!

## அங்கு வைத்து ஜனாதிபதி அறிவிப்பு

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னாரில் காற்றைக்கொண்டு மின் உற்பத்தி செய்யக்கூடிய வசதிகள் அதிகமாக காணப்படுகின்றன. ஆனால் கடந்த காலங்களில் சூழல் பாதுகாப்பைக் கருத்தில் கொள்ளாமல் காற்றாலை மின் உற்பத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.இந்த நிலையில் அந்தத் திட்டங்கள் அனைத்தும் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது. 02








## யாழ். கிட்டு பூங்காவில் ஜனாதிபதி அனுரா

யாழ்ப்பாணம் நல்லூர் கிட்டு பூங்காவில் இன்று பிற்பகல் தொடங்கிய தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சித் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க உட்பட பிர முகர்கள் பலரும் பங்கு பற்றினர். அமைச்சர் சந்திரசேகரனும், அக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தக் கூட்டத்தில் உரையாற்றினர். கூட்டம் மாலை வரை நடைபெற்றுக் கொண்டிருந்தது.



# பிள்ளையான்தான் தேசப்பற்றாளன்!

## அடித்துக் கூறுகின்றார் கம்மன்பில

“கருணாவும், பிள்ளையானும் புலிகள் அமைப்பில் இருந்து வெளியேறி, புலிகளுக்கு எதிராகப் போராட தீர்மானித்தமையே புலிகள் அமைப்பின் முடிவுக்குரிய ஆரம்பமாகும்.” – என்று பிவிருது ஹெல உறுமயவின் தலைவர் சட்டத்தரணி உதய கம்மன்பில தெரிவித்தார்.

“அத்துடன், புலிகள் அமைப்பிடமிருந்து இந்நாட்டை பாதுகாப்பதற்காக வழங்கிய தீர்க்கமான பங்களிப்புக்காக தேசிய நாயகனாக கருதப்பட வேண்டியவரே பிள்ளையான். ஒரு தேசப்பற்றாளருக்காகவே நான் சட்டத்தரணியாக முன்னிலையாகியுள்ளேன்” – எனவும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:–

பிள்ளையானுடன் 30 நிமிடங்கள் கலந்துரையாடினேன். 4 பொலிஸார் எமது உரையை முழுமையாக செவிமடுத்துக்கொண்டிருந்தனர். சட்டத்தரணியொருவர் தனது சேவையாளருடன் கலந்துரையாடும் விடயம் இரகசியத்துக்குட்பட்டது. எனினும், இங்கு நான்கு பொலிஸார் இருந்தனர்.

பிள்ளையான் கதறி அழுதவாறே என்னிடம் இப்படி கேள்வி எழுப்பினார். ‘புலிகள் அமைப்பில் இருந்து விலகி, இராணுவத்துடன் இணைந்து–உயிரைக்கூட பணயம் வைத்து புலிகளைத் தோற்கடிப்பதற்கு போராடினேன்.

அன்று புலிகள் பக்கம் இருந்தவர்களில் சிலர் இன்று நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ளனர். சிலர் வியாபாரிகளாகியுள்ளனர். மேலும் சிலர் அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்களாகியுள்ளனர். இவர்களிடம் கேள்வி கேட்கப்படுவதில்லை.

என்னை 5 வருடங்கள் தடுத்து வைத்திருந்தனர். இறுதியில் வழக்கு தொடுப்பதற்கு போதுமான சாட்சி இல்லை என்பதால் வழக்கு மீளப்பெறப்பட்டது. தற்போது மீண்டும் தடுப்பில் வைத்துள்ளனர்.

புலிகள் அமைப்பை தோற்கடிப்பதற்காக, நாட்டுக்காக உயிரை பணயம் வைத்து போராடியதாலா என்னை இப்படி நடத்துகின்றனர்.” என பிள்ளையான் மிகவும் உணர்வுப்பூர்வமாக என்னிடம் கேள்வி எழுப்பினார்.

சமூகவலைத்தளங்களில் எழுதும் சிறு பிள்ளைகளுக்கு பிள்ளையான் என்பவர் யாரென்பது தெரியாமல் இருக்கலாம். புலிகளிடமிருந்து இந்நாட்டை பாதுகாப்பதற்காக அவர் வழங்கிய தீர்க்கமான பங்களிப்புக்காக தேசிய நாயகனாக கருத வேண்டிய நபர் அவர்.

கருணாவும், பிள்ளையானும் புலிகள் அமைப்பில் இருந்து விலகி, புலிகளுக்கு எதிராக போராட தீர்மானித்தமையே புலிகள் அமைப்பின் முடிவின் ஆரம்பமாகும்.

பிள்ளையான் என்பவர் புலிகள் அமைப்பில் பலவந்தமாக இணைக்கப்பட்ட சிறுவர் போராளியாவார். புலிகள் அமைப்பில் சிறுவர் போராளிகள் இருந்தனர் என்பதற்கான ஒரு சாட்சியே பிள்ளையான்.

கருணா அம்மானும் புலிகள் அமைப்பில் சிறந்து விளங்கியவர். வடக்கு சமரின்போது புலிகளை, கிழக்கு புலிகளே பாதுகாத்து வந்துள்ளனர். 6 ஆயிரம் பயங்கரவாதிகளுடன் தான் கருணாவும், பிள்ளையானும் புலிகள் அமைப்பில் இருந்து வெளி யேறினர்.

நாட்டைவிட்டு தப்பிச்செல்லாது, புலிகள் அமைப்பைஒழித்துக்கட்டுவதற்கு இராணுவத்துடன் இணைந்து போராடும் முடிவை இவர்கள் இருவரும் எடுத்தனர். புலிகளிடமிருந்து எம்மால் இலகுவில் கிழக்கையும் மீடக்கக்கூடியதாக இருந்தது.

பிள்ளையான் என்பவர், புலிகள் அமைப்பை கைவிட்டவர் என்பது மட்டுமல்ல புலிகளுக்கு எதிராகவும், எமது நாட்டுக்காகவும் போராடிய தேசப்பற்றாளர்.” –என்றார்.

---

## மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர் காலத்தில் மக்களின் கருத்துக்களை அறிந்து கொண்டு, சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில்,அந்த வேலைத் திட்டத்தை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மன்னார் பஜார் பகுதியில் இன்று வியாழக்கிழமை காலை இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் மன்னாரில் இருந்து தமிழ்நாடு, இராமேஸ்வரத்திற்கான பயணிகள் படகுச் சேவையை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதற்கான பேச்சுவார்த்தைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

சுமார் 5 – 6 வருடங்களுக்கு பின்னர், எம்மிடம் மிகப் பாரிய அளவிலான டொலர் கையிருப்பில் உள்ளது.

கடந்த 6 மாதங்களாக ரூபாவின் மதிப்பு சரியவில்லை. நாம் எரிபொருள் விலையை குறைத்தோம். மின்சாரக் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க நாங்கள் பாடுபடுகிறோம். அரசு ஊழியர்களின் சம்பளம் உயர்ந்துள்ளது.

அஸ்வெசும உதவித்தொகை அதிகரிக்கப்பட்டது. அது மட்டுமல்லாமல், அடுத்த ஜூன் மாதம் முதல் 400,000 புதிய குடும்பங்களுக்கு அஸ்வெசும வழங்கப்படும். இது மக்களை கவனித்துக் கொள்ளும் அரசாங்கமாகும்.

அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் சீருடைகள் வழங்கப்படுகின்றன. 300இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளுக்கு காலணிகள் வாங்கப் பணம் வழங்கப்படுகிறது.1.6 மில்லியன் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை கொள்வனவு செய்ய தலா ரூ. 6,000 வழங்கினோம்.

அது மாத்திரமல்லாமல், 5–6 வருடங்களுக்கு பின்னர் தற்போது 30ஆயிரம் பேரை அரச சேவையில் சேர்க்க உள்ளோம். இதற்காக எம்.பி.க்கள் மற்றும் அமைச்சர்களுக்கு பின்னால் செல்ல வேண்டிய அவசியமில்லை. பத்திரிகைகளில் விளம்பரப் படுத்துவோம், அதன்படி பரீட்சைக்கு தோற்றி அதிக புள்ளிகளைப் பெற்று வேலை வாய்ப்பை பெற்றுக் கொள்ளுங்கள்.

அரசசேவையில்தமிழ்பேசுபவர்களின் பற்றாக்குறை உள்ளது. பொலிஸ் நிலயங்களிலும் இது காணப்படுகின்றது.

எனவே, 2,000 புதிய பொலிஸார் பணியமர்த்தப்படுவார்கள். தமிழ் தெரிந்த உங்கள் பிள்ளைகளை பொலிஸ் பணியில் இணையச் செய்யுங்கள். இது ஒரு மரியாதைக்குரிய வேலையாகும். நம் நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் வேலை. மேலும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ் பேசத் தெரிந்தவர்கள் அரச பணியில் சேர வேண்டும். இதன் மூலம் ஒன்றாக இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்..

அத்துடன் வடக்கில் நடந்த போர் காரணமாக, மக்களின் நிலங்களை அரசாங்கம் கையகப்படுத்த வேண்டியிருந்தது. சில வீதிகள் மூடப்பட வேண்டியிருந்தன. தேசிய மக்கள் சக்தி இந்தப் பிரச்சினைகள் அனைத்தையும் தீர்த்து அவற்றை விடுவித்துள்ளது.

மக்கள் தங்கள் பணிகளை சுதந்திரமாகச் செய்யக்கூடிய ஒரு நாட்டை உருவாக்குவோம். – என அவர் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மயில்வாகனம் ஜெகதீஸ்வரன், செல்லத்தம்பி திலகநாதன் மற்றும் மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபை , மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு ஆகிய பிரதேச சபைகளின் வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# இரத்தக் கறைகளுடன் வவுனியாவில் மீட்கப்பட்ட சடலத்தை உறவுகளிடம் ஒப்படைப்பதில் தாமதம்

(கி.வசந்தன்)

சட்ட வைத்திய அதிகாரி வராமையால் வவுனியாயில் குளத்தின் அலைகரைப் பகுதியில் இருந்து இரத்தக் கறைக் காயங்களுடன் மீட்கப்பட்ட இளைஞனின் சடலத்தை ஒப்படைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

வவுனியா, பாவற்குளத்தின், சூடு வெந்தபுலவு அலைகரைப் பகுதியில் இருந்து நேற்று மாலை இளைஞர் ஒருவரின் சடலம் இரத்தக் கறைக் காயங்களுடன் மீட்கப்பட்டிருந்தது. சடலமாக மீட்கப்பட்டவர் கடந்த புதுவருட தினமன்று காணாமல் போயிருந்த வவுனியா விநாயகபுரம் பகுதியைச் சேர்ந்த கோபிதாசன் (வயது-33) என்பவருடையது என அடையாளம் காணப்பட்டிருந்தது.

இந்தச் சடலத்தை நேற்று மாலை பார்வையிட்ட பதில் நீதவான் அன்ரன் புனிதநாயகம் சடலம் மீதான உடற்கூற்று பரிசோதனைக்கு உத்தரவிட்டமையுடன், இது தொடர்பான துரித விசாரணைகளை முன்னெடுக்குமாறும் பொலிஸாரைப் பணித்திருந்தார்.

வவுனியா வைத்தியசாலையின் பிணவறை குளிரூட்டிகள் பழுதடைந்த நிலையில் காணப்படுவதால், அந்தச் சடலம் செட்டிகுளம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்நிலையில், வவுனியா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி வராமையால சடலம் உடற் கூற்று பரிசோதனை மேற்கொள்ளப்படாது, செட்டிகுளம் வைத்தியசாலையின் பிரேத அறையில் தொடர்ந்தும் வைக்கப்பட்டுள்ளதாக இறந்தவரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

# நிர்வாக சபைக் கூட்டம்

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் எதிர்வரும் (20) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அகில இலங்கை சைவப் புலவர் சங்கத் தலைவர் சைவப்புலவர் சி.கா.கமலநாதன் தலைமையில் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிர்வாக சபைக் கூட்டத்தில் 2025 ஆம் ஆண்டுக்கு உரிய சைவப் புலவர், இளஞ்சைவப்புலவர் பரீட்சைகள், பட்டமளிப்பு விழா, சைவநாதம் மலர் வெளியீடு, சைவ மாநாடுதொடர்பானவிடயங்கள்,கலந்துரையாடப்படவுள்ளதால் அனைத்து நிர்வாகசபை உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்க செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் தெரிவித்துள்ளார்.

# சட்ட விரோதமாக மாணிக்க கற்கள் அகழ்வில் ஈடுபடுவோர் அதிகரிப்பு!

## நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

(மஸ்கெலியா)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் கங்கேவத்தை பகுதியில் உள்ள மவுஸ்சாகலை நீர்த்தேக்கத்தில் மாணிக்க கற்கள் அகழ்வில் ஈடுபட்டு வருவோர் அதிகரித்துள்ளனர் என்றும் இது குறித்து சம்பந்தப்பட்ட மவுஸ்சாகலை நீர் தேக்க பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு பிரிவினர் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

கடந்த சில மாதங்களாக மத்திய மலைநாட்டில் கடும் வெப்பம் நிலவி வருகிறது. இதனால் நீர் தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாக குறைந்துள்ளது.

இதனால் சட்ட விரோதமாக மாணிக்க கற்கள் அகழ்வில் ஈடுபட்டு வருவோர் அதிகரித்துள்ளனர்.

அத்தோடு பாரிய அளவில் அகன்ற குழிகள் மூடப்படாமல் உள்ளதால் அந்தப் பகுதியில் விறகு தேடி செல்லும் சிறார்கள் மற்றும் முதியோர் பாரிய சிரமத்தை எதிர் நோக்குகின்றனர். இதனால் உயிர் ஆபத்து உள்ளது என்றும் தெரிவிக்கின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனம் செலுத்த வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தபால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்துள்ளது.

அதன்படி, அஞ்சல் வாக்களிப்பு இப்போது 2025 ஏப்ரல் 24, 25, 28 மற்றும் 29 ஆகிய திகதிகளில் நடைபெறும்.

முன்னர் இது ஏப்ரல் மாதம் 22, 23 மற்றும் 24 ஆகிய திகதிகளில் நடைபெறும் என தேர்தல் ஆணைக்குழு அறிவித்திருந்தது. அந்த மூன்று தினங்களிலும் தபால் மூலம் வாக்களிக்க முடியாத அரச ஊழியர்கள் ஏப்ரல் மாதம் 28 மற்றும் 29 ஆகிய திகதிகளில் தபால் மூலம் வாக்களிக்க வாய்ப்பு வழங்கப்படும் என ஆணைக்குழு முன்னர் தெரிவித்திருந்தது. அது இப்போது ஏப்ரல் 24, 25, 28 மற்றும் 29 ஆகிய திகதிகளில் நடைபெறும் என் அறிவிக்கப்பட்டுள்ளது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## டிரம்பின் கூத்துகள்!

அமெரிக்காவில் மீண்டும் அதிபர் ட்ரம் ஆட்சிக்கு வந்தமையை அடுத்து வரிசையாகப் பிரகடனப்படுத்தும் வரி அதிகரிப்பு அறிவிப்புகள் உலகையே மலைக்க வைத்திருக்கின்றன. சர்வதேச வர்த்தகப் போர் ஒன்றை அவர் பிரகடனப்படுத்தி இருக்கின்றார் என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது.

உலகப் பெரும் வல்லரசான அமெரிக்காவின் நிர்வாகம் விதூஷகனான தனி மனிதர் ஒருவரின் கைகளில் விழுந்து விட்டதோ என்று உலகம் சிந்திக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

கண்மூடித்தனமாக மாறி மாறி அவர் அறிவிக்கும் பரஸ்பர வரிவிதிப்புப் பிரகடனங்கள் உலக வர்த்தக சம நிலையை ஆட்டிப்படைத்து பெரும் களேபர நிலையை ஏற்படுத்தியிருக்கின்றன.

உலகத்துக்கு மட்டுமல்ல, முதலில் அவரது அமெரிக்க நாட்டுக்கு அது நெருக்கடி தருவதாக மாறி இருக்கின்றது என்று உள்வீட்டுத் தகவல்கள் கூறுகின்றன.

அதிபர் ட்ரம்பின் பரஸ்பர வரி விதிப்பால் அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சி வீழ்ச்சி அடையும், விலைவாசி எகிறும் என்று அந்த நாட்டின் மத்திய திறைசேரித் தலைவர் ஜெரோம் பவல் எச்சரித்திருக்கின்றார்.

மத்திய திறைசேரி எதிர்பார்த்ததை விட மிக அதிகமாக அமெரிக்க அதிபர் டிரம்ப் அண்மையில் பரஸ்பர இறக்குமதி வரிகளை அறிவித்திருக்கின்றார் என்று பவர் குறிப்பிட்டுள்ளார்.

ட்ரம்பின் அறிவிப்பை அடுத்து அமெரிக்கப் பொருளாதாரத்தின் நிதிப் பாதுகாப்புக் குறித்து மக்களின் உணர்வில் சரிவு ஏற்பட்டு இருப்பதை ஜெரோம் பவல் ஒப்புக்கொண்டார்.

இந்த வரி அதிகரிப்பு அதிக பண வீக்கம் மற்றும் மெதுவான வளர்ச்சி உள்ளிட்ட பொருளாதார விளைவுகளுக்கு வழி செய்யலாம் என்றும் அவர் கூறுகிறார்.

இத்தகைய பரஸ்பர வரி அதிகரிப்பு அமெரிக்க நாட்டில் உற்பத்தியை அதிகரிக்கும், அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்கும் என்று டிரம்ப் தமது நடவடிக்கைகளுக்கு நியாயம் கற்பித்தாலும் அமெரிக்காவின் பங்குச் சந்தை பெரும் மாற்றங்களுக்கு உள்ளாகி இருக்கின்றது. பெரு வீழ்ச்சியைக் கண்டிருக்கின்றது. ட்ரில்லியன் கணக்கான டொலர் முதலீட்டாளர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது.

அமெரிக்காவில் மட்டுமல்ல, உலகளாவிய ரீதியிலேயே பங்குச்சந்தையில் பெரும் வீழ்ச்சியை அமெரிக்க அதிபரின் நடவடிக்கை ஏற்படுத்தியிருப்பது கண்கூடு.

எதிர்காலத்தில் அமெரிக்காவோடு வர்த்தக ரீதியில் உறவுகளைப் பலப்படுத்துவதில் உலக நாடுகள் நம்பிக்கையீனமான போக்கைக் கொண்டிருக்கும் சூழலை அமெரிக்க அதிபரின் நடவடிக்கை ஏற்படுத்தியிருப்பது மறுக்கமுடியாத விடயம்.

இந்த வர்த்தகப் போரின் மூலம் வர்த்தக ரீதியாகவும் பிற அடிப்படைகளிலும் தன்னோடு முரண்பட்டு நிற்கும் பிரதான நாடுகளோடு மட்டுமல்லாமல், நேச நாடுகள், அயல் நாடுகள், நெருக்கமான நாடுகள் எல்லாவற்றுடனுமான நல்லுறவை அமெரிக்க அதிபர் நாசமாக்கி இருக்கின்றார் என்பதே உண்மை.

உலகின் மேலாதிக்க சக்தி அமெரிக்காவே என்ற திமிர்த்தனத்தில் அதன் தலைவர் அதிபர் ட்ரம்ப் நடத்தும் கோமாளிக் கூத்துகள்தான் இவை.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

VOTE






## தேசிய மக்கள் சக்தியின் பிரசார அலுவலகம் மன்னாரில் திறப்பு

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் அலுவலகம் திறப்பு நிகழ்வு மற்றும் பிரச்சார நடவடிக்கைகள் மன்னார் எமில் நகர் மற்றும் பனங்கட்டு கொட்டு பகுதிகளில் இடம் பெற்றன.

தேசிய மக்கள் சக்தியின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் மன்னார் நகர சபை வேட்பாளர்கள் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள், பொது மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மகஜர்களை பொது மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரனிடம் கையளித்தனர்.



## மூத்த தமிழரசுக் கட்சி உறுப்பினர் வேலுப்பிள்ளைக்குக் கௌரவம்





(வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்பு படுவான்கரை பிரதேசத்தின் மூத்த தமிழரசுக் கட்சி உறுப்பினர் ஓய்வு நிலை தபாலதிபர் குமாரசிங்கம் வேலுப்பிள்ளை (வயது -93) பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

மண்முனை வடக்கு மாநகர சபை வேட்பாளர் அறிமுக விழாவில் வைத்து அவர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். படுவான்கரை பிரதேசத்தில் அந்த நாள்களில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தூணாக திகழ்ந்த வேலுப்பிள்ளை இறுதியாக முதலைக்குடா தபாலக தபாலதிபராக இருந்து ஓய்வு பெற்றவர்.

மண்முனை வடக்கு மாநகர சபை வேட்பாளர் அறிமுக விழா மட்டக்களப்பு கூளாவடி டிஸ்கோ விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இதன்போது கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர் கௌரவிக்கப்பட்டனர். அவர்களில் ஒருவராக வேலுப்பிள்ளையும் கௌரவிக்கப்பட்டார்.

நிகழ்வில் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா.ஸ்ரீநேசன், இரா.சாணக்கியன்,இ.ஸ்ரீநாத் மற்றும் இலங்கைத் தமிழரசு கட்சியின் வட்டார வேட்பாளர்களும் ஆதரவாளர்களும் கலந்துகொண்டனர்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

## தேசிய மக்கள் சக்தியின் சாவகச்சேரி வேட்பாளர்!

(த.சுபேசன்)

தேசிய மக்கள் சக்தியின் சாவகச்சேரித் தொகுதி வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வும மக்கள் சந்திப்பும் சாவகச்சேரி பஸ் நிலைய வளாகத்தில் இடம்பெற்றன.

நிகழ்வில் வெளிவிவகார மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், கடற்தொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் இ.சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாநகரசபை முதன்மை வேட்பாளர் கபிலன், தென்மராட்சித் தொகுதி இணைப்பாளர் பிரகாஷ், சாவகச்சேரி நகர சபை மற்றும் பிரதேசசபை தேர்தல் தொகுதி வேட்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.





# புத்தாண்டில் நடத்தப்பட்ட துடுப்பாட்டம்; சங்கிலியன் சனசமூக நிலையம் வெற்றி!





தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு சங்கிலியன் சன சமூக நிலையத்துக்கும் திருநெல்வேலி வாலையம்மன் சனசமூக நிலையத்துக்கும் இடையில் நடைபெற்ற துடுப்பாட்டப் போட்டியில் நல்லூர் சங்கிலியன் சன சமூக நிலையம் வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டது.

யாழ்ப்பாணம் – நல்லூர் சங்கிலியன் சனசமூக நிலையத்துக்கும் திருநெல்வேலி வாலையம்மன் சனச மூக நிலையத்துக்கும் இடையில் வருடா வருடம் தமிழ் சிங்கள புது வருடப் பிறப்பினை முன்னிட்டுத் துடுப்பாட்டப் போட்டி நடத்தப்படுவது வழமை.

அந்த வரிசையில் 2025 ஆம் ஆண்டு சித்திரை புது வருடப் பிறப்பன்று (14) செங்குந்தா இந்துக் கல்லூரி மைதானத்தில் போட்டி நடைபெற்றது. இதில் சங்கிலியன் சனசமூக நிலையம் சம்பியனைத் தனதாக்கிக் கொண்டது.





# தென்மராட்சியில் சர்வதேச தரம் வாய்ந்த விளையாட்டு மைதானம் உருவாக்கப்படும்

## தென்மராட்சி அபிவிருத்திக் கழகம் நம்பிக்கை

(த.சுபேசன்)

தென்மராட்சியில் சர்வதேசத்தரம் வாய்ந்த விளையாட்டு மைதானம் ஒன்று அரசு, புலம்பெயர் உறவுகள் மற்றும் தென்மராட்சி மக்களுடைய உதவியுடன் உருவாக்கப்படும் என்று தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் பிரித்தானியா நாட்டுப் பிரதிநிதி வைத்தியர் ஆ.புவிநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தென்மராட்சியில் விளையாட்டு மைதானம் ஒன்று இல்லாத குறைபாடு காணப்படுகின்றது.

சாவகச்சேரி நகரசபையின் கண்காணிப்பில் சாவகச்சேரி நகரில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் பொது விளையாட்டு மைதான காணி உள்ள போதிலும் அதனை அபிவிருத்தி செய்யப்படவேண்டிய தேவை உள்ளது.

அருகில் உள்ள சில காணிகளைக் கொள்வனவு செய்து மைதானத்தை விருத்தி செய்ய முடியும்.

அண்மையில் விளையாட்டுத்துறை அமைச்சர் சாவகச்சேரிக்கு வருகை தந்திருந்த நிலையில் இந்த விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்ய வேண்டியதன் தேவைப்பாட்டைக் கூறியிருந்தோம்.

அந்த நிலையில் அமைச்சர் நேரடியாக மைதானத்தை பார்வையிட்டதுடன் அதனை அபிவிருத்தி

தொடர்ச்சி▼



# தென்மராட்சியில்...

**தொடர்ச்சி▲**

செய்வதற்கான திட்ட வரைபையும் கோரியிருந்தார்.

நாம் சாவகச்சேரி பொது விளையாட்டு மைதானத்தில் அரங்கம் அமைத்து ஒரு சர்வதேச தரம்வாய்ந்த மைதானமாக மாற்ற முயற்சி எடுக்கிறோம். அதற்கு அரசு, புலம்பெயர் உறவுகள் மற்றும் தென்மராட்சி மக்களுடைய பங்களிப்பு அவசியமாக உள்ளது.

சாவகச்சேரி பொது விளையாட்டு மைதானம் சிறந்த ஒரு இடத்தில் அமைந்துள்ளது.

அதனை அபிவிருத்தி செய்து சர்வதேச விளையாட்டு மைதானமாக உருவாக்கும் பட்சத்தில் எதிர்காலத்தில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளை நடத்தக் கூடிய வாய்ப்பு ஏற்படும்.-என்றார்.





# வவுனியா பாடசாலைகள் மட்ட உதைபந்தாட்ட போட்டி ஆரம்பம்!

(கி.வசந்தன்)

வவுனியா மாவட்ட பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்கம் நடத்தும், அமரர் சௌந்தநாயகம் ஞாபகார்த்த உதை பந்தாட்ட சுற்றுப்போட்டி வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டு மைதானத்தில் நேற்று (16) ஆரம்பமாகியது.

சங்கத்தின் இணைப்பாளர் இ.சற்சொரூபன் தலைமையில் இடம் பெற்று வரும் இந்தப் போட்டிகளின் ஆரம்ப நிகழ்வில் முதன்மை அதிதியாக வவுனியா உதவி மாவட்ட செயலாளர் ம.சபர்ஜா கலந்து கொண்டார்.



சிறப்பு அதிதிகளாகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.ஞானராஜ், ஆசிரிய ஆலோசகர் யூட் பரதமாறன், ஓய்வு நிலை உடற்கல்வி ஆசிரியை சாந்தினி சேவியர், மாவட்ட விளையாட்டு உத்தி யோகத்தர், அதிபர்களான ஜனகரன், ரெஜினோல்ட் மற்றும் அணி வீரர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்தச் சுற்றுப் போட்டியில் பல்வேறு பாடசாலைகளை சேர்ந்த 16 வயதுக்கு உட்பட்ட ஆண், பெண் வீரர்களை கொண்ட உதைபந்தாட்ட அணிகள் பங்குபற்றியிருந்தன.





# வேலோடுமலை வேலவன் இசைப்பாடல் வெளியீட்டு விழா

(வி.ரி.சகாதேவராஜா)


சித்தர்களின் குரல் ஏற்பாட்டில் “வேலோடுமலை வேலவன் இசை பாடல்” வெளியீட்டு விழா பங்குனி உத்தர தினத்தன்று ஆலய ஆதீனகர்த்தா எஸ். தியாகராஜா சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது.

வேலோடு மலையில் சித்தர்களின் குரல் அமைப்பின் ஸ்தாபகர் சிவசங்கர் ஜீ, நமசிவாய மகேஸ்வரன் சுவாமி, தலைவர் ஆதித்தன் மற்றும் துணைத்தலைவர் மனோகரன் முன்னிலையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

யாழ்ப்பாணம் திலக்சன் பாடலை அருமையாக அமைத்துள்ளார்.

பாடலை உருவாக்கிய மற்றும் பாடிய மூவரும் ஆலயம் சார்பிலும் சித்தர்கள் குரல் சார்பிலும் பொன்னாடை போர்த்தி பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.




EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA



# திருமலை சமுத்திர மகாவிஷ்ணு ஆலய கும்பாபிஷேகம்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை, உவர்மலை திருவருள்மிகு பூலக்ஷ்மி, மகாலக்ஷ்மி சமேத சமுத்திர ஸ்ரீ மகாவிஷ்ணு ஆலய கும்பாபிஷேகம் எதிர்வரும் (20) ஞாயிற்றுக் கிழமை காலை 9.35 முதல் 10.15 மணி வரையிலான சுப நேரத்தில் நடைபெறவுள்ளது.

உவர்மலை கீழ் வீதியில் உட்த்துறை முக சமுத்திர கரையில் அமைந்துள்ள இந்த ஆலய கும்பாபிஷேகத்தை முன்னிட்டு கர்மாரம்பம் நேற்று (16) புதன் கிழமை காலை 7.45 மணிக்கு ஆரம்பமாகி இரவு 8.30 வரை நடை பெற்றது.

எண்ணெய்க் காப்பு சாத்துதல் நாளை (18) வெள்ளி காலை 8 மணிக்கு ஆரம்பமாகி 19 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிவரை நடைபெற வுள்ளது.

# லிந்துலை மட்டுக்கலை தோட்டத்தில் உயிரிழந்த புலியின் உடலம் மீட்பு!



(தலவாக்கலை பி.கேதீஸ்)

தலவாக்கலை லிந்துலை மட்டுக் கலை தோட்டத்திலுள்ள காய்கறி தோட்டத்துக்கு அருகாமையில் சிறுத்தை ஒன்று கம்பி வலையில் சிக்கி உயிரிழந் துள்ளது என்று ரந்தெனிகல கால்நடை பிரிவின் கால்நடை வைத்தியர் அக லங்க பினிடிய தெரிவித்தார்.

பன்றி போன்ற விலங்குகளை பிடிக்க வைக்கப்பட்டிருந்த கம்பி வலை யில் சிக்கி உயிரிழந்த சிறுத்தையின் உடலம் புத்தாண்டு தினத்தன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இது நன்கு வளர்ந்த ஆண் சிறுத்தை எனவும் ரந்தெனிகல கால்நடை பிரி வின் கால்நடை வைத்தியர் அகலங்க பினிடிய தெரிவித்தார். இறந்த சிறுத்தை யின் உடல் பிரேத பரிசோதனைக்காக ரந்தெனிகல கால் நடை மருத்துவ பிரி வில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

சிறுத்தை புலிகளின் இறப்புகளைக் குறைப்பதற்காக வனவிலங்கு அதிகாரி கள் மேற்கொண்ட பல்வேறு திட்டங்கள் காரணமாக, 2024 ஆம் ஆண்டில் நுவரெலியா ஹக்கல வனவிலங்குப் பிரிவில் இருந்து எந்தவொரு சிறுத்தை புலிகளின் இறப்பும் பதிவாகவில்லை என்றும், ஆனால் இந்த ஆண்டு இது வரை இந்தப் பகுதியிலிருந்து மூன்று சிறுத்தை புலிகளின் இறப்புகள் பதிவா கியுள்ளன எனவும் வனவிலங்கு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

2024 ஆம் ஆண்டில் நாட்டில் 14 சிறுத்தை புலிகளின் இறப்புகள் பதிவாகி யுள்ளதாகவும், இந்த ஆண்டின் கடந்த சில மாதங்களில் மட்டும் ஆறு சிறுத்தை புலிகளின் இறப்புகள் பதிவாகியுள்ளன எனவும் வனவிலங்கு அதிகாரிகள் மேலும் தெரிவிக்கின்றனர்.



# சந்நிதியான் ஆச்சிரமத்தால் மன்னார், வவுனியா பகுதிகளில் உதவித் திட்டங்களும் கள ஆய்வும்

மன்னார் – பெரியமடு, காயாநகர் கிராமத்தில் வாழ்வாதார உதவியாக விவசாய செய்கைக்காக இரு குடும்பங்கள் பயன்படுத்துவதற்காக ஒரு லட்சம் ரூபா நிதியில் ஆழ்துளையிடும் கிணறு அமைக்கப்பட்டது.

மன்னார் – வட்டக்கண்டல், குருவில் கிராமத்தில் முன்னாள் போராளியான புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றுக்கு மருத்துவ செலவுக்காக 25 ஆயிரம் ரூபா நிதியும், அத்தியவசியமான உலர் உணவுப் பொதியும் வழங்கப்பட்டன.

மன்னார் – வங்காலை, நறுவிலிக்குளம் கிராமத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட மற்றொரு குடும்பம் ஒன்றுக்கு மருத்துவ செலவுக்காக 25 ஆயிரம் ரூபா நிதியும், அத்தியவசியமான உலர் உணவுப் பொதியும் வழங்கப்பட்டன.

மன்னார் – மடு, பெரியமுறிப்பு கிராமத்தில் இதய நோயால் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றுக்கு மருத்துவ செலவுக்காக 25 ஆயிரம் ரூபா நிதியும், அத்தியவசியமான உலர் உணவுப் பொதியும் வழங்கப்பட்டன.

மன்னார் – பெரியமடு, காயாநகர் முத்துமாரி அம்மன் ஆலய நிர்வாகத்தின் கோரிக்கைக்கு அமைவாக, அங்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டனர். ஆலயத்திற்கான கொட்டகை அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

மன்னார்– இரணைஇலுப்பைக்குளம் சின்னவலயன்கட்டு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் கோரிக்கைக்கு அமைவாக, நேரடியாகச் சென்று பார்வையிட்டதுடன் பாடசாலைக்கான பாதுகாப்பு வேலி அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.


வவுனியா – பெரியதம்பனை வரசித்தி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலையின் கோரிக்கைக்கு அமைவாக, நேரடியாகச் சென்று பார்வையிட்டதுடன் மாணவர்களுக்கான மாதாந்த சத்துணவுக்கான நிதி மற்றும் சீருடைகள் வழங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த உதவித் திட்டங்களையும் கள ஆய்வையும் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று மேற்கொண்டார்.





## சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வாக மகாபாரதம் சொற்பொழிவு



சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகளின் தலைமையில், ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வாக நாளை (18) வெள்ளிக்கிழமை ஆன்மீக அருளுரை இடம்பெறவுள்ளது.

இதில் மகாபாரதம் என்ற தொடர் சொற்பொழிவை ஆசிரியர் இரா.செல்வவடிவேல் நிகழ்த்தவுள்ளார்.

நாளை வெள்ளிக்கிழமை காலை 10.45 மணி தொடக்கம் 11.45 மணி வரை சொற்பொழிவு இடம்பெறும்.



# கொங்கோவில் படகில் ஏற்பட்ட தீ விபத்தில் 50 பேர் உயிரிழப்பு

கொங்கோவில் 400 பயணிகளுடன் பயணித்த படகில் திடீர் தீவிபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த தீவிபத்தில் சுமார் 50 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேற்படி படகில் உணவு தயாரிக்கப்பட்டுக்கொண்டிருந்தபோதே இவ்வாறு தீ விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், சம்பவத்தின் போது படகில் சுமார் 400 பேர் காணப்பட்டதுடன், அதில் 100 பேர் வரையில் காணாமல் போயுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தீக்காயங்களுடன் மீட்கப்பட்ட பலர் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காணாமல்போன ஏனைய பயணிகளைத் தேடும் பணிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



# சூரிய மண்டலத்துக்கு அப்பால் உயிர்கள்

## கேம்பிரிட்ஜ் பல்கலை விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

சூரிய மண்டலத்துக்கு அப்பால் உயிர்கள் உள்ளன என்பதற்கான உறுதியான ஆதாரங்களை கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

ஜேம்ஸ் வெப் தொலைநோக்கியின் உதவியுடன் சூரிய மண்டலத்திற்கு அப்பால் உயிர்கள் இருப்பதற்கான ஆதாரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கே12-18பி எனப் பெயரிடப்பட்டுள்ள கிரகத்தில், பூமியில் வாழும் நுண்ணுயிர்களால் உருவாக்கப்படும் இரண்டு வாயுக்கள் உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கே12-18பி கிரகம் நமது பூமியை விட இரண்டரை மடங்கு பெரியது. அதேவேளை, பூமியில் இருந்து 124 ஒளியாண்டுகள் தொலைவில் உள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.



# 30 நாடுகளிலுள்ள தூதரகங்களை மூடுவதற்கு ட்ரம்ப் நடவடிக்கை!

30 நாடுகளிலுள்ள தூதரகங்கள் மற்றும் துணைத்தூதரங்களை மூடுவதற்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அமெரிக்க அரசாங்கத்தின் தேவையற்ற செலவுகளைக் குறைக்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவற்றுள் 10 தூதரகங்கள் மற்றும் 17 துணைத்தூதரகங்கள் அடங்குகின்றன.

ஐரோப்பா, ஆபிரிக்கா மற்றும் ஆசியாவில் உள்ள சில தூதரகங்களும் இதில் அடங்குவதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

சோமாலியா, ஈராக், மோல்டா, லக்சம்பர்க்,கொங்கோ,மற்றும்தெற்குசூடான் உள்ளிட்ட சில நாடுகளும் குறித்த பட்டியலில் உள்வாங்கப்பட்டுள்ளன.

பிரான்சில் அமெரிக்காவுக்கான ஐந்து தூதரகங்கள் உள்ள நிலையில், அவற்றையும் மூடுவதற்கு எதிர்பார்த்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், ஜேர்மன் மற்றும் போஸ்னியாவில் உள்ள இரண்டு தூதரகங்கள், பிரித்தானியாவில் உள்ள ஒரு தூதரகம் ஆகியவற்றையும் மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூடப்பட்ட தூதரகங்களின் பணிகளை அண்டை நாடுகளில் உள்ள தூதரகங்கள் ஊடாக முன்னெடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சீனா மீது மீண்டும் வரியை உயர்த்தியது அமெரிக்கா

அமெரிக்கா– சீனா இடையேயான வர்த்தகப் போர் தீவிரமடைந்து வரும் நிலையில், சீனாவின் இறக்குமதிகளுக்கான வரியை அமெரிக்கா 245 சதவீதமாக உயர்த்தியுள்ளது.

நேற்று முன் தினம் அமெரிக்காவுக்கு, கனிமங்கள், உலோகம், காந்தம் உள்ளிட்டவற்றின் ஏற்றுமதியைச் சீனா அதிரடியாக நிறுத்தி பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்தது.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் சீன இறக்குமதிக்கான வரியை 145 சதவீதத்தில் இருந்து 245 சதவீதமாக உயர்த்தி அமெரிக்கா அறிவித்துள்ளது.



பாதுகாப்பு, மின்சார வாகனம், எரிசக்தி மற்றும் மின்னணுவியல் துறைகளில் பயன்படுத்தப்படும் 17 தனிமங்களின் தொகுப்பான 'உலகின் அரிய மண் தாதுக்களில் சுமார் 90 சதவீதத்தை சீனா உற்பத்தி செய்கிறது. தனது உற்பத்திக்கு அமெரிக்கா சீனாவையே அதிகம் சார்ந்துள்ளது.

இதனால் அமெரிக்காவின் ஆயுதங்கள், மின்னணுவியல், வாகன உற்பத்தியாளர்கள், எரோஸ்பேஸ் உற்பத்தியாளர்கள், செமிகண்டக்டர் நிறுவனங்கள், மற்றும் பிற நுகர்வோர் பயன்பாட்டுக்கான பொருள்களை தயாரிக்க தேவையான மூலக் கூறுகள் முற்றிலும்தடைப்படும்அபாயம்உருவாகியுள்ளது.

மேலும் அமெரிக்க விமான தயாரிப்பு நிறுவனமான 'போயிங்'கிடம் இருந்து விமானங்கள் வாங்க தங்கள் நாட்டு விமான நிறுவனங்களுக்கு சீனா தடைவிதித்தது. மேலும் விமானம் தொடர்பான எந்த கருவிகளையும் அமெரிக்காவிடமிருந்து வாங்க வேண்டாம் எனவும் உள்நாட்டு விமான நிறுவனங்களுக்கு சீனா உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையிலேயே சீன இறக்குமதிக்கான வரியை ஏற்கனவே விதித்த 145 சதவீதத்தில் இருந்து 245 சதவீதமாக உயர்த்தி அமெரிக்கா அறிவித்துள்ளது.

குறித்த அறிவிப்பு உலகரங்கில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ட்ரம்பின் அதிரடியான வரி விதிப்பால் இந்தியாவில் தங்க விற்பனை வீழ்ச்சி

தங்கத்தின் விலை கணிசமாக உயர்ந்துள்ளதால், இந்திய மக்களால் தங்க நகைகளை வாங்குவது குறைந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அதற்கு பதிலாக, அவர்கள் தங்கள் பழைய தங்க நகைகளை புதிய தங்க நகைகளாக மாற்றி வருவதாக கூறப்படுகிறது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிமுகப்படுத்திய வரிகளால் ஏற்பட்ட உலகளாவிய பொருளாதார ஸ்திரமின்மைக்கு மத்தியில், உலக சந்தையில் தங்கத்தின் விலைகள் சாதனை அளவை எட்டியுள்ளன. இது ஒரு அவுன்ஸ் ஒன்றுக்கு 3,245 டொலர் என விலை நிர்ணயிக்கப்பட்டது.

உலகிலேயே தங்க நகைகளை அதிகம் பயன்படுத்தும் நாடுகளில் ஒன்றாக இந்தியா கருதப்படுகிறது. தற்போதைய சூழ்நிலையில் தங்கத்தின் விலை உயர்ந்து வருவதால் இந்திய மக்களும் கடும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்.

புதிய விலை உயர்வு காரணமாக, இந்தியாவில் 10 கிராம் தங்கத்தின் விலை ஒரு லட்சம் இந்திய ரூபாயாக பட்டியலிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக, இந்திய மக்கள் பழைய தங்க நகைகளை மாற்றி புதிய தங்க நகைகளை வாங்குகின்றனர்.

இதற்கிடையில், இந்திய மக்களால் பழைய தங்க வளையல்கள், மோதிரங்கள் மற்றும் தங்க நகைகள் மற்றும் தங்கப் பொருட்களின் மறுவிற்பனை கணிசமாக அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடை உரிமையாளர்கள் தங்க நகைகளை உருக்கி உடனடியாக விற்கக்கூடிய தங்கக் கட்டிகளாக மாற்றும் பணியில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தங்க வியாபாரிகளும் வாடிக்கையாளர்களின் குறிப்பிடத்தக்க பற்றாக்குறை இருப்பதாகக் கூறுகிறார்கள்.

இந்தியா உலகின் இரண்டாவது பெரிய தங்க நுகர்வோர் நாடாகும், மேலும் அந்த தங்கத்தில் பெரும் பகுதி, 70 சதவீதம், தங்க நகைகளை உற்பத்தி செய்ய பயன்படுத்தப்படுகிறது. உலகின் மிகப்பெரிய தங்க நுகர்வோர் சீனா ஆகும்.



# வக்பு சட்டம் அரசமைப்புக்கு விரோதமானது; கேரள முதல்வர் பினராயி விஜயன் தெரிவிப்பு




வக்பு சட்டத்தின் மூலம் ராஷ்ட்ரீய ஸ்வயம் சங் (ஆர்.எஸ்.எஸ்) மற்றும் பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க) அரசியல் ஆதாயம் பெற முயற்சிக்கிறது என்று கேரள முதல்வர் பினராயி விஜயன் குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும், புதிய சட்டம் அரசமைப்புக்கு எதிரானது, பாரபட்சமானது என்றும் அவர் விமர்சித்துள்ளார்.

இதுதொடர்பில் முதல்வர் பினராயி விஜயன் நேற்று செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“வக்பு சட்டம் நம் நாட்டின் மத நம்பிக்கை மற்றும் கூட்டாட்சி தத்துவத்தை மீறுகிறது. முஸ்லிம்களை ஓரங்கட்டுவதற்கான வாய்ப்பாகவும் அதன் மூலம் அரசியல் ஆதாயம் பெறுவதற்கான வாய்ப்பாகவும் ஆர்.எஸ்.எஸ் இதைப் பார்க்கிறது. இது முஸ்லிம்களுக்கு மட்டும் எதிரானது என்று நான் முன்பே கூறியிருந்தேன். அதையேதான் அவர்களின் ஆர்கனைஸர் கட்டுரையும் இப்போது உறுதிப்படுத்தியுள்ளது. ஒன்றை மறந்துவிடாதீர்கள், ஆர்எஸ்எஸ் சிறுபான்மையினரை உள்நாட்டு எதிரிகளாக கருதுகிறது. முஸ்லிம்கள், கிறிஸ்தவர்களை மட்டுமே அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதுதான் அவர்களின் அணுகுமுறை.

மத்திய அரசு சிறுபான்மையினருக்கு எதிரான, பெரும்பான்மையினரைத் திருப்திப்படுத்தும் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. அதனால்தான் கேரள சட்டப்பேரவை அச்சட்டத்துக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இடதுசாரிக் கட்சிகளும் அச்சட்டத்தை நாடாளுமன்றத்தில் எதிர்த்தனர்.” என்றார்.



# ஔரங்கசீப்பின் கல்லறையை பாதுகாக்க கோரி ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளருக்கு கடிதம்!

மகாராஷ்டிராவில் சத்ரபதி சம்பாஜி நகரில் உள்ள ஔரங்கசீப்பின் கல்லறையை அகற்றக் கோரி சில இந்து அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. சமீபத்தில் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நடைபெற்ற பேரணியில் வன்முறை வெடித்தது. இதையடுத்து, அங்கு சில நாள்கள் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், கடைசி முகலாயப் பேரரசர் பகதூர் ஷா ஜாபரின் வழித்தோன்றல் என்று கூறும் யாகூப் ஹபீபுதீன் டூசி, ஷம்பாஜி நகரில் உள்ள ஔரங்கசீப்பின் கல்லறையைப் பாதுகாப்பதை உறுதிசெய்யக் கோரி ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ்/க்கு கடிதம் எழுதியுள்ளார்.

முகலாயப் பேரரசரின் கல்லறை அமைந்துள்ள வக்ஃப் சொத்தின் பராமரிப்பாளர் என்றும் கூறும் இளவரசர் யாகூப், அந்தக் கல்லறை தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச்சின்னமாக’ அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், பண்டைய நினைவுச்சின்னங்கள் மற்றும் தொல்பொருள் தளங்கள் மற்றும் எச்சங்கள் சட்டம், 1958 இன் கீழ் பாதுகாக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் எழுதியிருக்கும் கடிதத்தில்,

‘இந்த சட்டத்தின் விதிகளின்படி, பாதுகாக்கப்பட்ட நினைவுச்சின்னத்தில் அல்லது அதற்கு அருகில் எந்தவோர் அங்கீகரிக்கப்படாத கட்டுமானம், மாற்றம், அழிவு அல்லது அகழ்வாராய்ச்சியையும் மேற்கொள்ள முடியாது.

மேலும், இதுபோன்ற எந்தவொரு செயலும் சட்டவிரோதமாகவும் சட்டத்தின்கீழ் தண்டனைக்குரியதாகவும் கருதப்படும்’ என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அதில், 1972ஆம் ஆண்டு உலக கலாசார மற்றும் இயற்கை பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கான யுனெஸ்கோ மாநாட்டில் இந்தியா கையெழுத்திட்டதை மேற்கோள் காட்டி, ‘அத்தகைய நினைவுச்சின்னங்களை அழித்தல், புறக்கணித்தல் அல்லது சட்டவிரோதமாக மாற்றுவது சர்வதேச கடமைகளை மீறுவதாகும்’ எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயத்தை கவனத்தில் கொண்டு, ஔரங்கசீப்பின் கல்லறைக்கு தேசிய மற்றும் சர்வதேச சட்டங்களின்படி முழு சட்டப் பாதுகாப்பு வழங்கப்படுவதை உறுதி செய்ய மத்திய அரசு மற்றும் யுஎஸ -க்கு உத்தரவிடுமாறு அவர் ஐ.நா. பொதுச் செயலாளர் அலுவலகத்தை வலியுறுத்தியுள்ளார்.

கனடா முரசு

பக்கங்கள் - 3

வியாழக்கிழமை 17/04/2025

## கனடாவிலிருந்து அமெரிக்காவுக்கான தரை வழிப் பயணிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி



C2 ▶



# தமிழர்கள் வாழும் பகுதியில் துப்பாக்கிச் சூடு; இருவர் பலி

கனடாவின் டொரண்டோ நகர பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் டொரண்டோ - லோகன் அருகே உள்ள பெயின் அவென்யூவில் இடம்பெற்றுள்ளதாக அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெயின் அவென்யூவில் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸாருக்கு தகவல் வழுங்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த இரண்டு ஆண்களை மீட்டுள்ளனர்.

C2 ▶

# 70 வீத கனடா சுற்றுலாப் பயணிகள் அமெரிக்கா செல்ல விரும்பவில்லை

கனடா சுற்றுலாப் பயணிகளில் 70 வீதமானோர் இந்த வருடம் அமெரிக்காவுக்குச் செல்ல விரும்பவில்லை என அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பில் தெரியவந்துள்ளது.

அத்துடன் மார்ச் மாதத்தில் அமெரிக்க எல்லை வழியாக காரில் பயணிக்கும் கனடா சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 32 சதவீதம் குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரி சர்ச்சைகள் மற்றும் தற்போதைய அரசியல் சூழ்நிலை ஆகியவை காரணமாக அமெரிக்கா நோக்கி பயணிப்பதைத் கனடா மக்கள் தவிர்த்து வருகின்றனர் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த சூழ்நிலையில், கோடை காலத்தில் கனடா சுற்றுலாப் பயணிகளை மாநிலத்திற்கு வருமாறு அமெரிக்காவின் கலிபோர்னியா மாநில ஆளுநர்



கேவின் நியூசம் அழைப்பு விடுத்துள்ளார்.

கலிபோர்னியா கெலிவாஷிங்டனில் இருந்து 2000 மைல்கள் தொலைவில் அமைந்துள்ளது.

ஹாலிவுட் சின்னம், 'வாக் ஆஃப் ஃபேம்', கடற்கரைப் புல்வெளிகள், திராட்சைத்தோட்டங்கள் என பல ஆண்டுகளாகவே கனடாப் பயணிகளின் மிகவும் பிரபலமான சுற்றுலா தலமாக கலிபோர்னியா இருந்துள்ளது.

புதிய சர்வதேச சுற்றுலா

C2 ▶



# கனடாவிலிருந்து அமெரிக்காவுக்கான தரை வழிப் பயணிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

கடந்த மாதம் கனடாவிலிருந்து தரைவழியாக அமெரிக்க எல்லையை கடக்கும் பயணிகளின் எண்ணிக்கை பெரிதும் குறைந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

அமெரிக்க நுகர்வோர் பாதுகாப்புத் துறை வெளியிட்ட தரவுகளின்படி இந்த விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டின் மார்ச் மாதத்தில், கனடா-அமெரிக்க நில எல்லை வழியாக 3,183,009 பயணிகள் அமெரிக்காவுக்குள் பிரவேசித்தனர்.

இது கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் பதிவான 4,093,973 பயணிகளுடன் ஒப்பிடும் போது சுமார் 900,000 எண்ணிக்கை வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

பயண வாகனங்கள் மற்றும் நடந்து செல்லும் பயணிகளின் எண்ணிக்கை சுமார் 26 சதவிகிதம் குறைந்துள்ளது.

இதேவேளை, வணிக போக்குவரத்துக்காக பயன்படுத்தப்படும் லொறிகள் எண்ணிக்கை கடந்த ஆண்டின் மார்ச் மாதத்தை விட 6 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

இந்த ஆண்டின் மார்ச் மாத பயணிகள் எண்ணிக்கை, 2022 ஆம் ஆண்டு கொரோனா கட்டுப்பாடுகள் இருந்த காலம் முதல் இதுவரை பதிவான குறைந்தபட்சம் ஆகும்.

இந்த பயணிகளின் சரிவு, கனடா மற்றும் அமெரிக்கா இடையிலான உறவுகளில் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழலை பிரதிபலிக்கிறது.

**தமிழர்கள் வாழும்...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் எனவும் மற்றொருவர் தீவிர காயங்களுடன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும் உயிரிழந்தார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு பிறகு சந்தேக நபர்கள் இருவரும் கறுப்பு நிற ஆடைகளை அணிந்து வித்ரோ பார்க் நோக்கி ஓடிச் சென்றனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், இந்த பகுதியில் கடந்த இரண்டு மாதங்களில் இது இரண்டாவது துப்பாக்கிச் சூட்டு சம்பவம் என்பது குறிப்பிடத்தக்கது.





**70 வீத...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரசாரத்தை ஆரம்பித்துள்ள ஆளுநர் கேவின் கானடா மக்களிடம் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்

எனினும், கனடாவை 51 ஆவது மாநிலம் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குறிப்பிட்டிருந்தமையும், கனடா மீது விதித்த புதிய வரிகள் விதிக்கப்பட்டமையும் கனடிய சுற்றுலாப் பயணிகள் வீழ்ச்சிக்கான காரணமாக கருதப்படுகின்றது.



# அஜாக்ஸில் பல வாகனங்கள் மோதி விபத்து; ஒருவர் பலி

அஜாக்ஸில் நேற்றைய தினம் பல வாகனங்கள் மோதி ஏற்பட்ட விபத்தில் ஒரு பெண் உயிரிழந்தார்.

அஜாக்ஸ்- டர்ஹாம் பிராந்திய பொலிஸார் இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளனர்.


பிற்பகல் 1:30 மணியளவில், கிங்ஸ்டன் சாலை மேற்கு மற்றும் எலிசபெத் வீதி சந்திப்பில் மூன்று வாகனங்கள் மோதி விபத்து ஏற்பட்டதாகவும், சம்பவம் தொடர்பாக விசாரணை நடைபெற்று வருவதால் அந்த சாலை மூடப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் காயமடைந்த ஒருவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான மேலதிக விவரங்கள் மற்றும் விபத்து நேர்ந்த சூழ்நிலை குறித்து இதுவரை அதிகாரப்பூர்வமாக தகவல்கள் வெளியிடப்படவில்லை.

# 4 பேர் மீது காரால் மோதிய இளைஞனை தேடும் பொலிஸ்





கனடாவில் நான்கு பேர் மீது காரை ஏற்றி காயப்படுத்திய நபரை பொலிஸார் தீவிரமாக தேடி வருகின்றனர் என அந்நாட்டு ஊடகங்கள செய்தி வெளியிடுள்ளன.

மேற்படி விபத்து சம்பவம் டொராண்டோநகரப்பல்கலைக் கழகத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

23 வயதுடைய ரியான் பெட்ரோஃப் என்ற இளைஞனை டொராண்டோ பொலிஸார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

மேற்படி நபர் ஒரு வாகனத்தை வேண்டுமென்றே ஒரு குறிப்பிட்ட நபரை நோக்கி ஓட்டிச் சென்று தாக்கியுள்ளார் எனவும் ஆனால் எதிர்பாராத விதமாக நான்கு பேர் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸாரால் தேடப்படும் ரியான் பெட்ரோஃப் உடனடியாக பொலிஸில் சரணடையுமாறு அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

ஊடகங்களுக்கு பேசிய டொராண்டோபொலிஸ்ஆய்வாளர் எர்ரோல் வாட்சன், பெட்ரோஃப் ஒரு குறிப்பிட்ட நபரை இலக்கு வைத்ததாக பொலஸார் நம்புவதாகக் தெரிவித்தார்.

இருப்பினும், சந்தேக நபருக்கும் பாதிக்கப்பட்டவருக்கும் இடையிலான உறவு குறித்து மேலும் விவரங்களை அவர் வெளியிட மறுத்துவிட்டார்.

பெட்ரோஃபை அடையாளம் காண உதவும் வகையில் அவரது புகைப்படத்தை பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

பொதுமக்கள் பெட்ரோஃபை ஆபத்தானவராக கருத வேண்டும் என்றும் அவரை யாராவது பார்த்தால் உடனடியாக பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும் ஆய்வாளர் வாட்சன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# ஸ்கார்பரோவில் ஏற்பட்ட தீவிபத்தில் மூதாட்டி பலி



டொராண்டோ – ஸ்கார்பரோவில் உள்ள ஒரு வீடு கடந்த வியாழக்கிழமை மாலை தீக்கிரையாகியது. இந்த சம்பவத்தில் 80 வயதான பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என டொராண்டோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போர்ட்ஸ்மௌத் டிரைவ் மற்றும் லாரன்ஸ் அவென்யூ ஈஸ்ட் அருகே அமைந்த வீட்டில் தீப்பற்றிக் கொண்டதாக கிடைத்த தகவல்களின் அடிப்படையில் தீயணைப்பு படையினர் விரைந்து சம்பவ இடத்திற்கு சென்றுள்ளனர்.

டொராண்டோ தீயணைப்பு துறையின் தகவலின்படி, அவர்கள் வருகை தந்த போதே வீட்டு பின் பகுதியிலிருந்து அதிக புகையும் தீயும் பரவியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. தீயணைப்பு வீரர்கள் தீயை கட்டுப்படுத்தும் பணியிலும் உள்ளே தேடும் பணியிலும் தீவிரமாக ஈடுபட்டனர்.

வீட்டின் முகப்பு பகுதியின் தரைதளத்தில் இருந்து ஒருவர் மீட்கப்பட்டார் என்று சம்பவ இடத்தில் அதிகாரிகள் ஊடகங்களுக்கு தெரிவித்தனர். மீட்கப்பட்ட மூதாட்டி உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

ஆனால், பின்னர் அவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் உறுதி செய்துள்ளனர். தீ விபத்தின் காரணம் இதுவரை வெளியிடப்படவில்லை. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.